Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | இந்தியா — இலங்கை வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 1 ஆம் நாள் முஹர்ரம் 1 (14-5-64) வியாழக்கிழமை இதழ் 93

# என். எம்.- பிலிப் - கெனமன் - மூவருக்கும் மந்திரி பதவி?

## பிரதமரை இவ்வாரம் மீண்டும் சந்திப்பர்

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக இடதுசாரித் தலைவர்கள் மீண்டும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை இவ்வாரம் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். கதிர்காமத்துக்குச் சென்றுள்ள பிரதமர் தமது சுற்றுப்பிரயாணத்தைச் சுருக்கிக் கொண்டு விரைவில் கொழும்புக்குத் திரும்பவிருக்கிறார்.

கூட்டுமந்திரிசபையில் சமசமாஜ, கமயூனிஸ்ட், எம். ஈ. பி. கட்சித் தலைவர்கள் மூவருக்கும் மந்திரி பதவி அளிக்கவேண்டுமென்று இடதுசாரி முன்னணி கோரவிருக்கிறது.

குறைந்த பட்ச பொதுத் திட்டமொன்றை இடதுசாரி முன்னணி சமர்ப்பிக்குமென்றும் டாக்டர் என். எம். பெரேராவின் ஒன்பது அம்சத் திட்டத்தின் மீது பொதுத் திட்டம் அமைக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

பிற்போக்கு மந்திரிகளை விலக்கவேண்டுமென்ற கோரிக்கையை திரு. பிலிப் கைவிட்டு விட்டதால் கூட்டரசாங்கம் அமைக்கப்படுவது நிச்சயமென அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

## பௌத்தத்தை காப்பது எமது கடமை

### கதிர்காமத்தில் பிரதமர்

கொழும்பு, புதன்

'பௌத்த மதத்தின் புனிதத் தன்மையினாலேயே இலங்கை உலக நாடுகள் மத்தியில் மதிப்படைந்து வருகின்றது. எமது கலாச்சாரமாக பௌத்தமதம் விளங்கிவருகின்றது. அதை பேணிப் பாதுகாக்கவேண்டியது எமது கடமையாகும்'.

இவ்வாறு இன்று காலை கதிர்காமத்தில் உள்ள கிரிவிகாரையில் நடைபெற்ற புனித சின்ன பிரதிஷ்டையின் பின்னர் பெருந்திரளான மக்கள் மத்தியில் பேசுகையில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா குறிப்பிட்டார். இன்று காலை சுமார் பத்துமணியளவில் முதலாவது புனித சின்னத்தை மல்வத்தை பீடாதிபதி பிரதிஷ்டை செய்துவைத்தார். இரண்டாவது புனித சின்னத்தை பிரதமர் சார்பில் கல்வி கலாச்சார மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல பிரதிஷ்டை செய்தார். பிரதிஷ்டை வைபவத்துக்கு முன்னர் மல்வத்தை பீடாதிபதி பிரதமர் ஆகியோர் மாணிக்க கங்கையிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

பௌத்த தூபிகளை பழைய காலத்தில் இருந்த மாதிரி கட்டுவதற்கு முயற்சி செய்து வருவதாகவும், கலாச்சார தேசிய வேட்கைகளை பூர்த்தி செய்ய மக்கள் ஆதரவு தரவேண்டுமெனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

## ஷேக் அப்துல்லா ஸ்ரீநகர் திரும்பிச் சென்றார்

### நேருவுடன் நடத்திய பேச்சில் திருப்தி

புதுடில்லி, மே. 13

முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக்அப்துல்லா இந்தியாவுக்கு விஜயம் செய்து பிரதமர் நேருவையும் இதர அரசியல் சமூகத் தலைவர்களையும் சந்தித்துப் பேசியபின் இன்று ஸ்ரீநகருக்குத் திரும்பிச் சென்றார். அவரை திருமதி இந்திரா காந்தி விமானநிலையத்தில் வழியனுப்பி வைத்தார்.

நிருபர்களிடம் ஷேக்அப்துல்லா பேசுகையில் பிரதமர் நேருவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றித் திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்தார். காஷ்மீர் பிரச்னைக்கு நியாயமானதொரு தீர்வு காணப்படாவிட்டால் காஷ்மீரில் மட்டுமல்லாது இந்திய உபகண்டத்திலேயே அமைதியின்மை நிலவும் என்று திரு. அப்துல்லா கூறினார்.

காஷ்மீர் பற்றி சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் காஷ்மீருக்கு விலை பேசும் முறையிலல்லாது உறவு முறையில் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான தீர்வு காணவேண்டுமென்றார்.

## தமிழ் பாடசாலைகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர்

### தமிழரசுக் கட்சி எதிர்க்கும்

கொழும்பு, புதன்

வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதற்காக இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். விரைவில் இவர்கள் தங்கள் பதவியை ஏற்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பிரயாணமாவார்கள்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமித்து சிங்களத்தை கட்டாயமாகத் திணிக்கும் முயற்சியை தமிழ் பேசும் மக்கள் முழுமூச்சுடன் எதிர்ப்பார்களென்றும் பாடசாலைகள் மூடப்பட்டாலும் சிங்களத் திணிப்பை எதிர்த்தேயாகவேண்டுமென்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர் தெரிவித்தார். தமிழரசுக் கட்சி இதைத் தீவிரமாக எதிர்க்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிங்களத்தில் சிரேஷ்டதராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

---

## போக்குவரத்து மந்திரிக்கு வவுனியா எம். பி. நன்றி

யாழ்ப்பாணம், வியா.

வவுனியா நகரசபை எல்லைக்குள் பாதுகாப்பின்றியிருந்த இரு பிரதான ரயில்வே கடவைகளுக்கு கதவுகள்போடுவதற்கு போக்குவரத்து மந்திரி உறுதியளித்துள்ளது குறித்து வவுனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரம் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று பாதுகாப்பின்றிருக்கும் மற்ற ரயில்வே கடவைக்கும் கதவுகள் போடுவதற்கு மராமத்து மந்திரி ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டுமென திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

## வீரபத்திரசுவாமி கோவில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரசுவாமி கோவிலில் வரும் சனிக்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இரவு தண்டிகைத திருவிழா நடைபெறும்.

இந்த உற்சவத்தையொட்டி வண்ணை ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபகவதரின் கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

யாழ்ப்பாணம் ராணி தியேட்டருக்கு அருகாமையில் இருக்கும் ஜுபிலி பசார் கட்டிடத்தில்

"உஸ்மான் பிறதேர்ஸ்"

திறப்புவிழா

இன்று 14—5—64 வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 8 மணிக்குள் வரும் சுபவேளையில் ஆரம்பிக்கப்படும் அத்தருணம் தாங்கள் யாவரும் சமுகந்தந்து ஏகுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
S. M. B. தாஜுதீன்

ஜுபிலி பசார்,
5, 7, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 362

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

மணிவாக்கு

என் மனைவியை நான் காமக் கண்ணுடன் பார்த்தவரை எங்களிருவருக்கும் உண்மையான பரஸ்பர அன்பு இல்லை. பிரம்மசரிய விரதமெடுத்த பின்புதான், எங்கள் உறவு ஆத்மீகமாகி, காமம் செத்து அன்பு ஆட்சி புரியலாயிற்று.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Iaffna Telegram. EELA NADU Jaffna Phone 389

[illegible] குரோதி ஆண்டு வைகாசி ௴ 1 உ (14-5-64)

## புதிய கைத்தொழில்கள்

தேசியமயக் கொள்கையையும் சோஷலிஸமயக் கொள்கையையும் பற்றி அதிகமாகப் பேசப்படும் இக்காலத்தில், தனிப்பட்டவர்கள் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் ஏற்கனவே ஆரம்பித்து நடத்தும் கைத்தொழில்களை பலப்படுத்தவும் தயங்குவது பகிரங்க ரகசியம். இவ் விஷயத்தில் தனியார் துறைக்கு தக்க உத்தரவாதமும் பாதுகாப்பும் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இன்றேல் விரும்பத்தக்க கைத்தொழில் அபிவிருத்தி இங்கு ஏற்பட முடியாது போகும்.

தனியார் கைத்தொழில் அபிவிருத்திக்குக் கூடுமான உதவியை அளிப்பதென்ற கொள்கையை அரசாங்கம் கைக்கொண்டுள்ளதாக மூன்று வருடங்களுக்கு முன் அறிவித்தது. முக்கியமான பெரிய கைத்தொழில்களை அரசாங்கம் நடத்துகையில், சிறிய கைத்தொழில்களை ஆரம்பிக்கத் தனியார்களுக்கு உற்சாகமளிக்கவேண்டுமென்றும், அரசாங்கமும், தனிப்பட்டவர்களும் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபடவேண்டுமென்றும், இந்தியாவைப் போல் இங்கும் ஒரு மேலான கொள்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் பலரும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க உற்சாகத்துடன் முற்படலாயினர்.

சென்ற மூன்று வருடங்களிலே புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து மொத்தம் 1500 பேர் மனுச்செய்து கொண்டதில், 1200 மனுக்கள் பரிசீலனைசெய்யப்பட்டு அவற்றில் 470 ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளனவாம். இவற்றில் 260 சிறிய கைத்தொழில்களில் ஏற்கனவே உற்பத்தி நடப்பதாயும், நடப்பு வருடத்தில் 170 புதிய கைத்தொழில்கள் ஏற்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்புதிய கைத்தொழில்களுக்காக 16 கோடி 60 லட்சம் ரூபாய்க்கு மெஷின்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கவும், மூலப்பொருள் இறக்குமதிக்காக 17 கோடி ரூபாய்க்கு செலவாணி அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இப்புதிய கைத்தொழில்களின் பயனாக 30 கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டதாயும் கைத்தொழில் அமைச்சின் கணக்கின்படி தெரியவருகின்றது. இப்புள்ளிவிபரங்கள் உண்மையாயின், நிலைமை பாராட்டத்தக்கதே. அடுத்த இரு வருடங்களில் உற்பத்தி பெருகுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் ஆரம்பித்த புதியகைத்தொழில்களில் பலவற்றுக்கு போதிய மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி கிடைக்கவில்லை என்றும் இதனால் உற்பத்தியை நிறுத்தி, பலரை வேலையிலிருந்து நீக்க வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இங்கு ஆரம்பிக்கும் புதிய கைத்தொழில்கள், அநேகமாக இங்குள்ள மூலப்பொருள்களைக் கொண்டே நடக்கும்படியும், முதலில் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதாகவுமிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களுக்கு அவசியம் தேவையான வசதிகளை எக்காரணம் பற்றியும் மறுப்பதாயின் அது நம்பிக்கை மோசமாவதுடன் நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியையும் பெரிதும் பாதிப்பதாக இருக்கும்.

புதிய கைத்தொழில்களை ஆரம்பித்துள்ள தனியார்களுக்கும், இதுபற்றிய அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும் நெருங்கிய ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அவ்வித ஒத்துழைப்புக்கான வாய்ப்பு இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. இத்தொடர்பு இவ்வித காரணத்தால், அவற்றின் நிலைமையையும், முக்கிய தேவைகளையும், இவற்றால் நாட்டுக்கு எவ்வளவுதூரம் நன்மை ஏற்பட்டுள்ளதென்பதையும் அரசாங்கம் தெரிந்துகொள்ள முடியாமற்போகும். வெற்றிகரமாக நடக்கும் தொழில்களை மேலும் அபிவிருத்தி செய்ய, வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்து கற்க வேண்டியிருக்கலாம். இங்குநடந்துவரும் புதிய கைத்தொழில் ஸ்தாபனங்களை அவ்வப்போது, சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு, அவற்றின் தேவை அறிந்து கூடுமானவரை பூர்த்தி செய்வதுடன், நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் தனியார் துறைக்குப் போதிய பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். புதிய கைத்தொழில்களுக்கு அனுமதி அளித்துவிட்டு, பின்னர் அவற்றைத் திரும்பியும் பாராமல் அலட்சியமாக இருப்பின் நாட்டுக்கு அது பல விஷயங்களிலும் பெரும் தீங்காக முடியும்.

# தமிழாசிரியரின் நியாயமான கோரிக்கைகள்

(ம. சிவநேசராசா)

[அகில இலங்கை தமிழாசிரிய சங்க பொதுக்காரியதரிசி]

**தமிழ் ஆசிரியர் சங்கம் இம்மாதம் 16-ந் திகதி தங்கள் 11 கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடத்தவிருக்கிறது.**

ஒருநாட்டின் சிறந்த செல்வம அந்நாட்டுக் குழந்தைகள். அவர்கள்தான் எதிர்காலத் தலைவர்களாகி இந்நாட்டின் மேன்மைக்கு உழைக்கப் போகிறவர்கள். இக்குழந்தைகளை எதிர்காலத்திற்கு ஏற்ற விதமாகப் பயிற்றும் பணியைப் புரிபவர் ஆசிரியர்களாகும். இந்த ஆசிரியர்களது நிலை நாடு சுதந்திரமடைந்து 17 ஆண்டுகளாகியும் முன்னேறாமலிருப்பது வருந்துதற்குரிய தொன்றாகும். இப்பதினேழு ஆண்டுகளில் குடியேற்ற நாட்டுக் கல்விக் காலத்திலிருந்தது போன்றே அன்னியராட்சிக் காலத்தில் அரசாங்க ஊழியர்களை உற்பத்தி செய்த ஆங்கில ஆசிரியனுக்கும் தேசிய மொழிகளையும் கலாச்சாரத்தையும் போற்றிக் காத்த சுயமொழி ஆசிரியனுக்குமிடையேயுள்ள பேதம் ஒழியவில்லை. அதற்கு ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் அநுபவித்துவந்த அரசியலுரிமைகூடப் பறிக்கப்பட்டு எல்லா ஆசிரியர்களும் அடிமைகளாக்கப் பட்டுள்ளார்கள். இவற்றைவிடத் தமிழாசிரியர்கள் உத்தியோக மொழி காரணமாகவும் அநாவசியமான கஷ்டங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வேளையில் எங்களது குறைகளை நாடறியச் செய்ய வேண்டியது எங்கள் கடமையாகின்றது. இப்பணியைச் செய்யவே கிளர்ச்சிகளையும் ஊர்வலங்களையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வேளையில் தமிழாசிரியர்களுக்கிழைக்கப்பட்டுள்ள அநீதிகள் சிலவற்றையும் பொதுவாக ஆசிரியர்களனைவருக்கும் காட்டப்படும் அநீதிகள் சிலவற்றையும் எடுத்துக் காட்டுவது பயனுடையதாகும்.

### பதவி உயர்வு

1960-ம் வருடம் டிசம்பர் மாதம் 1-ம் திகதி சகல உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்று, அதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பிருந்தே இப்பாடசாலை ஆசிரியர்களது பதவிஉயர்வு நிறுத்தப்பட்டது. அரசாங்கம் கையேற்றதும் பாரபட்சமின்றி நேர்மையான முறையில் பதவியுயர்வு கிடைக்குமென்று எல்லாத் தமிழாசிரியர்களும் எதிர்பார்த்தார்கள். வித்தியாபகுதியும் விரைவாக ஒரு முதுமுறை அட்டவணையைத் தயாரித்து வெளியிட்டது. அம்முறைப்படியே பதவி உயர்வு வழங்குவதாகவும்வாக்களித்தது. பாடசாலைகளைக் கையேற்று மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. நாடெங்கும் சுமார் 125 தமிழ்ப் பாடசாலைகள் தலைமையாசிரியர்களின்றி இயங்குகின்றன. இன்னும் பகிரங்க சேவைக் கமிஷனிடமிருந்து அங்கீகாரம், பழைய பல்லவியையே பாடி வித்தியாபகுதி காலத்தைக் கடத்தி வருகிறது. இதே வேளையில் முதுமுறை அட்டவணையில் முதலாவது இடத்தைப் பெற்றிருந்த ஆசிரியர் பதவியுயர்ச்சி பெறுமலே இளைப்பாறிவிட்டார். 41 ஆண்டுகள் பணியாற்றிய இவ்வாசிரியர் பதவியுயர்ச்சி பெறுமலே இளைப்பாறியது பெரும் கொடுமை.

அதேவேளையில் 1-12-60க்குப்பின் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு இருமுறை தலைமையாசிரியர்களாகப் பதவிஉயர்ச்சி வழங்கப்பட்டுள்ளது. 1956-ல், 1-ம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரம் பெற்றவர் பதவிஉயர்ச்சி பெற்றுள்ளார். மற்றொரு வகையில் சொன்னால் 13 வருடச் சேவையைப் பூர்த்தி செய்தவர் பதவியுயர்ச்சி பெற்றுவிட்டார். இதுமட்டுமல்ல 1960க்குப்பின் பதியப்பட்ட பாடசாலைகளனைத்திற்கும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களே தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இது கல்விப்பகுதியாரின் மாற்றாந்தாய்க் கொள்கைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

மாஜிக் கல்வியமைச்சர் ஜனாப் பதியுதீன் முகம்மது 8-11-62-ல் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் ஆங்கில ஆசிரியர்களைப் போலச் சுயபாஷா ஆசிரியர்களுக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படவில்லையென்ற குறை நியாயமானது என ஒப்புக் கொண்டுள்ளார். இது நியாயமான குறையெனத் தாமுணர்ந்து அவர்களுக்கு 1-ம் தரவித்தியாதரிசி பதவிகளையும், மற்றப் பதவிகளையும் வழங்க வழிசெய்ததாகப் பெருமையோடு குறிப்பிட்டுள்ளார். 1-ம் தரவித்தியாதரிசி பதவிகளும் 2-ம், 3-ம் தர அதிபர் பதவிகளும் சிங்கள-முஸ்லிம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது உண்மைதான். ஆனால் இன்றுவரை அவரது திட்டத்தின் கீழ் ஒரு தமிழாசிரியராவது பதவியுயர்ச்சி பெறவில்லை. இதுதானா சமசந்தர்ப்பம் வழங்கும் முறை? இனியாவது தமிழாசிரியர்களுக்கு நியாயம் கிடைக்குமா என்பதுதான் கேள்வி?

### சமசம்பளம்

சமவேலைக்குச் சமசம்பளம் வழங்கவேண்டுமென்பதும், மொழி வேறுபாடற்ற சமசம்பளம் வழங்கவேண்டுமென்பதும் உலக தொழிலாளர் ஸ்தாபனம் செய்துள்ள முடிவாகும். பலமுன்னேற்றமான தொழிற்சட்டங்களை இயற்றியுள்ள இலங்கை அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் சமசம்பளமளிப்பதை நிறைவேற்றத் தயங்குகிறது. இன்று சுயமொழிக்குமாஸ்தாவும், கூட்டுறவுப் பரிசோதகரும், பட்டதாரிகளும் சமசம்பளம் பெறுகையில் இந்த முடிவை சுயமொழி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கு ஏன் தாமதிக்கவேண்டும். சமசம்பளம் வழங்கவேண்டுமென்பதை 'வில்மட்பெரேரா' கமிசன்கூட ஆதரித்தபோதிலும், வித்தியாபகுதியின் தலைமைப் பீடத்திலுள்ளவர்களுக்கு இக்கோரிக்கை பிடித்திருப்பதா

(5-ம் பக்கம்பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கதிர்காமத்திலே பிரதமர் ஸ்ரீமா, எதிர்க்கட்சித் தலைவர் டட்லி, சில இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எல்லோரும் நேற்று கூடி வழிபட்டனராம். அரசியலில் நேர்மாறான கருத்துள்ளவர்களும் புத்த பெருமானின் பெயரால் அங்கு கூடி வழிபட்டது பெரிய காரியம்.

இந்த வழிபாட்டின் பயனென்ன? ஸ்ரீமாவும் டட்லியும் இனியாவது ஒருவரை ஒருவர் பகிரங்க மேடையில் திட்டிக் கொள்ளாமல் இருப்பார்களா? இவர்களிடையே அரசியல் எதிர்ப்பும் விரோதமும் குறையுமா? வழிபாட்டின் முக்கிய நோக்கமே நமது மனதை பரிசுத்தப் படுத்திக் கொள்ளத்தான்.

அதுவும் கருணையே வடிவான புத்தர் பெருமானை வணங்குவதன் நோக்கம் அவரது கருணை ஒரளவாவது நம் உள்ளத்தில் உதயமாக வேண்டுமென்பதற்குத் தான். அங்கு சென்று வழிபட்ட பின்பும், தங்கள் கட்சி விரோதங்களைப் பெரிதாக்கி ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதாயின், அங்கு டாகபாவைப் புதுப்பித்தலிலோ அல்லது சென்று வழிபட்டதிலோ என்ன பயன்?

* * *

எனக்கு வேறொன்றுமில்லை; இவர்கள் இருவரும் பதவி வேட்டைக்காக கட்சிப் போட்டா போட்டிகளை வளர்த்துக் கொண்டு, மீண்டும் தமிழ்-சிங்கள கலகத்தைக் கிளப்பி, நாம் நிம்மதியாக வாழ முடியாமற் செய்வார்களோ என்ற கவலைதான்.

கூட்டரசாங்கமேற் பட்டால் பௌத்தத்துக்கு ஆபத்து வந்துவிடுமென்ற கூச்சல் ஏற்கனவே கிளப்பப்பட்டுள்ளது. இந்து மதமும், பௌத்த மதமும் மிகவும் நெருங்கியவை என்றும், புத்தர் பெருமான் இருசமயத்தவருக்கும் பொதுவானவரென்றும் மகாத்மா காந்தி கூறியுள்ளனர். பல பௌத்த பிக்குகளைக் கேட்டதில் இருசமயங்களுக்கும் வேற்றுமையை விட ஒற்றுமையே அதிகமென்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

கதிர்காமத்திலே முருகனை வழிபடும் இந்து, பௌத்தர்களில் பலரும் கிரி விகாரைக்கும் சென்று வழிபடுவதைப் பார்க்கின்றோம். இவ்விரு சமயத்தவரையும் அந்த ஸ்தலம் சேர்த்து ஒற்றுமைப் படுத்தி வருகின்றது. ஏதாவது வேற்றுமை இருப்பினும், அங்கு சென்றால் எல்லாம் மறைய வேண்டும். ஆனால் அங்கு சென்றுள்ள அரசியல் வாதிகள், சும்மா இருப்பார்களா? புதிய தீங்குகள் எதுவும் நேராமல் அந்த முருகனும் புத்தரும் தான் நம்மைக் காக்கவேண்டும்.

* * *

யாழ்ப்பாணம் கீரிமலை புண்ணிய தீர்த்தத்தை, சமயாசாரங்களுக்கு மாறாகச் சிலர் கெடுப்பதாயும், தீர்த்தக் கரையில் மது மாமிசம் பாவிப்பதாயும், அதைத் தவிர்த்து, அந்தப் புனித ஸ்தலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும், அதை ஒரு சைவப் புனித நகராக்க வேண்டுமென்றும் "இந்து சாதனம்" பத்திரிகை நல்லதோர் தலையங்கம் எழுதியுள்ளது. இவ் விஷயத்தில் சைவ மக்கள் போதிய கவனமெடுக்க வேண்டிய அவசியத்தை ஒரன்பர் உணர்ச்சியுடன் எடுத்துக் கூறினர். இதைப்பற்றி சென்ற வருடம் மார்கழி மாதம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் ஒரு தீர்மானமும் நிறைவேறியது.

தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் நில்லாமல், இதைக் காரியத்தில் கொண்டு வர

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

சைவ மக்களும், சிறப்பாக அப் பகுதியிலுள்ளவர்களும், அந்த ஸ்தலத்திலே அநாசாரங்கள் நடவாவல் பார்த்துக் கொள்ள முன்வரவேண்டும். அதை புனிதமாக வைத்துக் கொள்வதெல்லாம் சைவ மக்களின் கையில் தான் வெகுவாகவுள்ளது. பௌத்தர்கள் தங்கள் ஸ்தலங்களைக் காப்பாற்ற எடுக்கும் பெரும் முயற்சிகளைக் கண்டபின்பாவது, சைவர்கள் தங்கள் சமயக் கடமையைச் செய்ய வேண்டாமா?

ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து வொள்ளெலும்பு தூணுவுரோம மேய்ந்து, தாமெடுத்த கூரை தவிரப் போவார் தயக்கம் பல படைத்தார் தாமரையினர், காணெடுத்து மாமயில்களாலுஞ் சோலை கழிப்பாலை மேய கபாலப்பனார், வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும் வழிவைத்தார் கவ்வழியே போதும் நாமே.

—திருநாவுக்கரசர்

# தாக்கப்பட்ட வழக்கில் ராஜாஜியின் புதல்வி சாட்சியம்

## சென்னை மேயர் விசாரணைக்கு அழைக்கப்படலாம்

சென்னை, மே31

ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியாரின் மகள் திருமதி நாமகிரிஅம்மாள் தியாகராஜநகரில் தனது வீட்டில் உட்கார்ந்து கொண்டு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த போது அவரைக் கத்தியால் குத்தியதாக சாமராவ் என்ற தையற்காரர்மீது தொடரப்பட்ட வழக்கு சைதாப்பேட்டை கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது திருமதி நாமகிரி அம்மாள் சாமராவை அடையாளம் காட்டினர்.

திருமதி நாமகிரிஅம்மாள் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

மார்ச் 9-ம் திகதி எனது வீட்டு வராந்தாவில் திருமதி தங்கம்மாவுடனும் அவரது புதல்வர் ஸ்ரீதருடனும் நான் உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரத்தின் பின் அவர்கள் வீட்டுக்குள் சென்றுவிட்டார்கள். இரவு 7-15 மணியளவில் நான் ஒரு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சமயத்தில் கையில் அரிவாளுடன் எதிரி வீட்டினுள் நுழைவதைப் பார்த்தேன். வராந்தாவில் ஏறிவந்து திடீரென அரிவாளால் என்னைத் தாக்கினர். எனது கையினல் தடுக்கமுயற்சித்தேன். "ஐயோ, ஐயோ" என்று கத்திக் கொண்டு வீட்டுக்குள் செல்ல முற்பட்டேன். எனது தலையிலும் தோளிலும் இடது முழங்காலிலும் காயங்கள் ஏற்பட்டன. என் கூச்சலைக் கேட்டு திருமதி தங்கம்மாவும் ஸ்ரீதரும் வெளியே வந்தனர். எதிரியை பின்னல் தள்ளினர். அதன்பேரில் எதிரி அரிவாளுடன் ஓட்டமெடுத்தார். சாமராவ் எங்கள் வீட்டில் துணிகள் தைத்துக் கொடுப்பதுண்டு.

உங்களுக்கும் எனக்குமிடையே தனிப்பட்ட விரோதம் ஏதாவதுஉண்டா என்று திருமதி நாமகிரியிடம் சாமராவ் கேட்டார்.

இல்லைலையென்று திருமதி நாமகிரி பதிலளித்தார்.

திருமதி தங்கம்மாவின் புதல்வர் ஸ்ரீதர் சாட்சியமளிக்கையில் சாமராவ் தற்போது மேயராக இருக்கும் திரு. எஸ் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுக்குள் சென்றதாக தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினர்.

வழக்கு மே 15-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேயர் திரு. கிருஷ்ணமூர்த்தி சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்காளி தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டி. ஆர். சுப்பிரமணியம் வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் எவரும் ஆஜராகவில்லை.

# இராவணனைக் கொன்றது இராமனல்ல; சீதையே!

— சேர் சி. பி.

சென்னை, மே 13

"நமதுநாட்டின்மேன்மைகள் அனைத்திற்கும் அடித்தளமாக—மூலாதாரமாக விளங்குவது இராமாயணம் மஹாபாரதமாகிய இரண்டு இதிகாசங்களுமேயாகும். மகாபாரதத்தில் யுத்தம், ராஜநீதி, நிர்வாகம் ஆகிய பொது விவகாரங்கள் பேசப்படுகின்றன. ஆனல் ராமாயணமோ நல்லறங்களின் ஊற்றாகவே விளங்குகிறது. உலக இலக்கியத்தில் இராமாயணத்துக்கு இணையாக வேறு இலக்கியம் தோன்றியதில்லை. அன்றாட வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவல்ல கிரந்தம் ஒன்றுண்டென்றல் அது ராமாயணமே. ராமனது சிறப்புக்கள் இணையற்றவை. ஆனல் அவனே கூறியது போல இராமாயணம் சீதையின் மகத்தான சரிதமே. தாய்க்குலம் எத்தன்மையது, எவ்வாறு இருக்க முடியும், இருக்கவேண்டும் என்பதை வாழ்ந்துகாட்டி விளக்கிய லோகமாதா சீதை. இராவணனைக் கொன்றது உண்மையில் அவளது தவமேயன்றி ராமன் அல்ல." இவ்வாறு மயிலை ரசிகரஞ்சனி சபாவில் நிகழ்ந்த வால்மீகி இராமாயண வெளியீட்டு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சேர் சி. பி. இராமசுவாமி ஐயர் கூறினர்.

கீர்த்தனச்சாரிய ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் வெளியிட்டுள்ள வால்மீகி இராமாயணத் தமிழ் பதிப்பின் நான்காவது புதிய வெளியீட்டை அறிமுகப் படுத்துவதற்காக ஸமஸ்கிருத வித்யாசமிதி இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி, சங்கராச்சாரிய சுவாமிகளும் ஜனதிபதி டாக்டர் ராதகிருஷ்ணனும் பிரபல கல்விமான்கள் பலரும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். விழா காலை சரஸ்வதி டி. கே. பட்டம்மாளின் துதிப்பாடலுடன் ஆரம்பமாகியது. தலைவரது உரையைத் தொடர்ந்து திருமுருக கிருபானந்த வாரி ஸ்ரீ டி. வி. விசுவநாத ஐயர் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிஐயர் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். பிரபல சினிமா நடிகர் சகஸ்ரநாமத்தின் சேவாஸ்டேஜ் குழுவினர் சுவர்க்கத்தில் ஆண்டாளும், கம்பரும், வால்மீகியும் உரையாடுவதாகக் கற்பனை செய்த காட்சியொன்றை நடித்துக் காட்டினர். பேராசிரியர் பி. சங்கரநாராயணன் நன்றி கூறினர்.

## தமது சாதனையை தாமே முறியடித்தார்

கலிபோர்ணியா, மே 12

குண்டெறிதலில் தாம் முன்னர் ஏற்படுத்தியிருந்த சாதனையை அமெரிக்கரான லோங் இம்முறை முறியடித்தார்.

முன்னர் அவர் 65 அடி 11 1/2 அங்குல தூரம் எறிந்திருந்தார். இப்போது 66 அடி 7 1/4 அங்குல தூரம் எறிந்து தமது முந்திய சாதனையை முறியடித்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

## தேயிலைத் தொழிலாளருக்கு ஊதியம் உயர்த்தப்படும்

கூனூர், மே 13

தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு மே மாதம் முதல் நாளிலிருந்து இரண்டாவது இடைக்கால ஊதிய உயர்வு அளிக்க சம்பள போர்டு சிபார்சு செய்துள்ளதென தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஜி. ராமானுஜம் தெரிவித்தார். சென்னை ராஜ்ய முதலமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் நீலகிரித் தொழிலாளர் சங்க ஆண்டு மாகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நீலகிரித் தொழிலாளரின் உற்சாகத்தையும் ஒற்றுமையையும் பாராட்டி உற்பத்தியை அதிகரிப்பதற்காக முதலாளிகளும் தொழிலாளரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் 14-ந் திகதி ஆரம்பம்

பம்பாய், மே 13

அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் இம்மாதம் 14-ந் திகதி பம்பாயில் கூடவிருக்கின்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவரும் பிரதமர் திரு. நேரு, காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜர் ஆகியோருக்காக சண்முகானந்தா ஹோலில் விசேஷ அறைகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கின்றன.

## வெயில் களைப்பு தெளிய மருந்து

சென்னை, மே 13

கடும்வெயிலில் சிக்கிக் கொண்டு மயக்கமாக விழுந்தல் தான் உஷ்ண அதிர்ச்சி ஏற்படுமாதலால் பொதுமக்கள் உஷ்ண அதிர்ச்சி பற்றி அதிக பயம் கொள்ளத் தேவையில்லையென சென்னையில் டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'வெயில் களைப்புக்காக ஆஸ்பத்திரிக்கு ஓடி வரவேண்டியதில்லை. தண்ணீரில்சிட்டிகை குளுகோஸை கரைத்துக் கொடுத்து குளுமையான இடத்தில் களைப்பு தீர ஓய்வெடுக்கச் செய்தால் விரைவில் தெளிந்து விடும்' என ராயப்பேட்டை ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் அறிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு உதவும் நாடுகள் வாஷிங்டனில் கூடுகின்றன

புதுடில்லி, மே 13

இந்தியாவுக்கு உதவும் நாடுகளின் குழு, இந்தியாவின் மூன்றாவது திட்டத்தில் 4-வது ஆண்டுக்கு உதவுவது பற்றி உறுதி கூற மே 26-ல் வாஷிங்டனில் கூடுகிறது.

1964-65 க்கு 100 கோடி டாலருக்கும் அதிகமாக இந்தியா உதவி கோரியுள்ளது. இந்தியா கோரியுள்ள தொகை கிடைக்காவிட்டாலும் அதற்கு கிட்டத்தட்ட வுள்ள தொகை கிடைக்கும் அறிகுறிகள் காணப்படுவதாக அறியப்படுகிறது.

## பாரதிதாசனுக்கு அனுதாபக் கூட்டம்

புதுச்சேரி, மே 13

புதுவை கவிஞர் பாரதிதாசன் காலமானதையொட்டி இம்மாதம் 3 ம் திகதி கவிஞரின் மாணாக்கர்கள் குழு கவிஞர் இல்லத்தில் அனுதாபம் தெரிவிக்க கூடினர்கள்.

தமிழ் வித்வான்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 30 மாணாக்கர்கள் கலந்துகொண்டனர். குழுவின் சார்பில் ஸ்ரீ அ. அருணகிரி, ஸ்ரீ ஆ. அழகன் எல்லோரையும் வரவேற்றனர்.

## சோஷலிஸ்டுகள் காங்கிரஸில் சேர்வர்

புதுடில்லி, மே 13

அகில இந்திய சோஷலிஸ்ட் ஊழியர்கள் மகாநாட்டை ஜூன் 10, 11 திகதிகளில் லக்ஷ்மணபுரியில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மகாநாடு திரு. அசோக்மேத்தாவால் ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் ஸ்ரீ ஈசுவரலால் தேசாய் தலைமை வகிப்பார் என்றும் தெரியவருகிறது. சோஷலிஸ்ட் அங்கத்தவர்கள் காங்கிரஸில் சேர வேண்டும் என்ற தீர்மானம் இந்தமகாநாட்டில் நிறைவேற்றப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. திட்டக்கமிஷன் உபதலைவர் திரு. அசோக் மேத்தா ஜனநாயக சோஷலிஸம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தயாரித்து வருகிறாரென்றும் அந்த விளக்கத்தைக் கொண்ட அறிக்கை இந்த மகாநாட்டில் விவாதிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.

## நட்சத்திரக் கவியரங்கம்

சென்னை, மே 13

சென்னை அண்ணாமலை மன்றத்தில் எதிர் வரும் செப்டம்பர் 12, 13 திகதிகளில் நிகழவிருக்கும் "முஷைஹரா" (கவியரங்கு)வில் வட இந்தியச் சினிமா நட்சத்திரங்கள் கலந்து கொள்வார்கள். இககவியரங்கம் முதன்முறையாகச் சென்னையில் இடம்பெறுகிறதென்பதும் உஸ்மான் அலிகான் என்றுஞ் சமூக சேவகியால் ஒழுங்கு செய்யப்படுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கவியரங்கத்தில் கலந்துகொள்ளும் 25 பம்பாய் நட்சத்திரங்களும் தாமே இயற்றிய கவிதைகளையோ அல்லது தாம் தேர்ந்தெடுத்த பழஞ் சிறப்புக்கொண்ட பாடல்களையோ பாடுவார்கள்.

இந்த விழாவின் மூலம் திரட்டப்படும் பணத்தில் 1/3 பகுதி ஏழ்மை நிலையிலுள்ள நட்சத்திரங்களின் புனர் வாழ்வுக்கும், எஞ்சிய 2/3 பங்கும் சென்னைச் செம்பிறை மருத்துவ மனையின் விஸ்தரிப்புக்கும் பயன்படுத்தப்படும்.

## காலம் சென்ற நடிகையின் நன்கொடை

### ஏழுமலையானுக்கு ரூ. 10 ஆயிரம்

சென்னை, மே 13

காலஞ்சென்ற நடிகை கண்ணாம்பாள் ஏழுமலையான் கோவில் தேவஸ்தானத்துக்கு ரூ. 10 ஆயிரம் அனுப்பியதாகவும் தமது பெயரில் திருமலையில் பங்களா கட்டச்சொல்லி எழுதியிருப்பதாகவும் கோயில் நிர்வாகி திரு. பி நரசிங்கராவ் தெரிவித்துள்ளார்.

## விவாகத்துக்கு வேகமாக வந்தார்!

லண்டன், மே 13

ஒக்ஸ்போர்ட்டில் விமான மேறி ஒக்ஸ்போர்ட் சயரில் உள்ள ஒரு தேவாலயத்தில் மணசசடங்குகளை நிறைவேற்ற வந்த ஒரு மணமகன் விமானம் தேவாலயத்தை நெருங்கியதும் 5000 அடி உயரத்திலிருந்து பாரசூட்மூலம்குதித்துத் தேவாலயத்துள் புகுந்த சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

## ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது

ஹைதராபாத், மே 13

மேலதிக நிலவரியை எதிர்த்து ஆந்திராப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்துவதென்று ஆந்திரமாநில சர்வகட்சி ஆணைக்குழு தீர்மானித்தது. எல்லா ஒத்துழையாமை இயக்கக் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்றும் அவர்கள் மீதுள்ள வழக்குகளைக் கைவிட வேண்டும் என்று கோரும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

## விலை, விஷம்போல் ஏறுகிறது

சென்னை, மே 11

கடலைப்பருப்பு, துவரம் பருப்பு, பாசிப்பருப்பு ஆகிய பருப்புககளின் விலை இப்போது விஷம்போல் ஏறிவருகிறது. ரூ. 45க்கு விற்ற ஒரு மூடை பாசிப்பருப்பு இப்போது ரூ. 100 ஆக விற்கப்படுகிறது. சென்றவருஷம் ரூ. 65 க்கு விற்கப்பட்ட ஒருமூடை உழுந்து இப்போது 68 ரூபாவாக விற்கப்படுகிறது.

## பலத்த தீ விபத்து

விருத்தாசலம், மே 13

சாத்துக்கூடல் என்ற இடத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 140 வீடுகளும் மாகாசபையினல் நிர்வகிக்கப்படும் சந்தையும் தீக்கிரையாகின. இத்தீவிபத்தினல் ஏற்பட்டநஷ்டம் சுமார் ஒரு லட்சம் என மதிப்பிடப்படுகிறது.

## புயல் வீசியது

ஈரோடு, மே 13

சமீபத்தில் இங்கு வீசிய பெரும் புயலினல் பலத்த சேதம் ஏற்பட்டது. வீதியோரங்களிலுள்ள மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டதால் மின்சார, டெலிபோன் கம்பிகள் அறுந்தன. மின்சாரவிநியோகம் தடைப்படுத்தப்பட்டது. பல வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. கடுமையான புயல் வீசியபோதிலும் மழை பலமாகப் பெய்யவில்லை. தீயணைப்புப்படை தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்காதிருந்தால் காவேரி தீரத்திலுள்ள செங்கற் சூளையில் பலத்த தீ விபத்தும் சேதமும் ஏற்பட்டிருக்குமென்று சொல்லப்படுகிறது.

## பெண் ஆணாக மாறினர்

திருச்சி, மே 13

மணச்சநல்லூர் அருகேயுள்ள மேலச்சீதேவி மங்கலத்தைச் சேர்ந்த ஒருபெண் சமீபத்தில் திடீரென்று ஆணாக மாறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் பெயர் சரோஜா என்றும் வயது 14 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போது இங்குள்ள ஆஸ்பத்திரியில் வைத்திய சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறான்.

மேலச்சீதேவி மங்கலத்தைச் சேர்ந்த மருதை என்பவரின் புதல்வி சரோஜா.

## 'அகதிகளுக்கு உதவுக' மந்திரி வேண்டுகோள்

திருவனந்தபுரம், மே 13

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் அகதி குடும்பங்களை இன்னும் அதிகமாக வரவேற்று வசதிசெய்து தரும் சாத்தியக் கூறுபற்றி ஆலோசிக்குமாறு தென்மண்டலத்திலுள்ள ராஜ்யங்களை உள்துறை மந்திரி திரு. நந்தா கேட்டுள்ளார். திருவனந்தபுரத்தில் கூடியுள்ள தென்மண்டலக் கவுன்சில் கூட்டத்துக்கு அவர் தலைமைவகித்துப் பேசுகையிலேயே மேற்படி வேண்டுகோள் விடுத்தார்.

## உண்ணாவிரதம் வெற்றி

கொழும்பு, புதன்

தனக்கு நிரந்தர உத்தியோகம் கொடாது தன்னை வேலையிலிருந்தும் நீக்கி விட்டதற்காக வருமான வரி இலாகாவில் தொலைபேசிப் பகுதியில் கடமையாற்றிய திரு. ரீ. கலீல் அண்மையில் உண்ணாவிரதம் இருந்ததின் பயனாக அவர் திறைசேரி அதிகாரியினல் தற்பொழுது தற்காலிக உத்தியோகமொன்றில் புவிச்சரித இயல் திணைக்களத்தில் அமர்த்தப்பட்டுள்ளார்.

திரு. கலீலின் புகார்கள் விசாரணை செய்த பின்னர் அவரின் நிரந்தர உத்தியோகம் பற்றி ஆராயப்படும் என்றும் தெரியவருகிறது.

## இனந்தெரியாத சடலம்

கிளிநொச்சி, புதன்

முறிகண்டிக்கு அருகில் புகையிரதப் பாதையில் இனந்தெரியாத ஒருவருடைய பிரேதம் கண்டுபிடிக்கப் பட்டது. இதனை விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்து பொலிஸாரிடம் இதைப்பற்றி பூரணமாக புலன் விசாரணை செய்யும் படியும் தற்கொலை செய்தவருடைய இனத்தவர்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கட்டளையிட்டுள்ளார்.

# திரைசேரியை திருத்தி அமைப்பது அவசியம்

## பதில் காரியதரிசி சுற்றறிக்கை

கொழும்பு, புதன்

திறைசேரியின் நிர்வாக முறைகள் திருத்தியமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமானதென திறைசேரியின் பதில் காரியதரிசி திரு. திலக்குணரத்ன நிரந்தரக் காரியதரிசிக்கும் சகல இலாகாத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

"திறைசேரியைத் திருத்தி அமைத்தல்" என்ற தலைப்புடனான அந்தக் குறிப்பில் பல வருடங்களாகவே திறைசேரியைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் இருந்துவருவதாகவும், திறைசேரியின் மீது சுமத்தப்படும் கண்டனங்கள் சரியானதாகவே இருப்பதால் இப்பொழுது அதைத் திருத்தி அமைக்கவேண்டியது மிகவும் அவசியமாகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. திலக்குணரத்ன தமது குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

நீண்டகாலமாக திறைசேரியின் நிர்வாக முறை பற்றி பலத்த கண்டனங்கட் தெரிவிக்கப்படுவதுடன், அது திருத்தி அமைக்கப்பட வேண்டும் எனவும் அடிக்கடி கோரப்பட்டுவருகின்றது. மந்திரிகள், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள், தொழிற்சங்கங்கள், திறைசேரி உத்தியோகஸ்தர்கள் உட்பட அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் பல முறைகளில் திறைசேரி பற்றி முறையீடுகள் செய்துள்ளனர். திறைசேரியின் நிர்வாக முறைகள் சிலவற்றில் குறைபாடுகள் உள்ளன என்பது இதிலிருந்து அறியக்கூடியதாகும். நாட்டின் வளர்ச்சிக்கேற்ப பல தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் திறைசேரி திருத்தியமைக்கப்படவேண்டும்.

## கண்டியில் புகையிலைச் செய்கை

### நிலம் வழங்குமாறு கோரிக்கை

கண்டி, புதன்

கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த பல கிராமங்களில் வாழும் மக்கள் பலர் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுவருவதால் தேவையான காணிகளை இவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 10 ஏக்கர் முடிக்குரிய காணி தருமாறு கண்டி கிராமிய புனர்வாழ்வுச்சபை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

நெல் விதைப்பு முடிவுற்ற பின்னர் மழைகாலத்தை நெருங்கியே புகையிலை நாட்டப்படுவதால் இது விவசாயிகளுக்கு பெரிதும் உதவியாயிருக்கும் எனவும் அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## மதுவிலக்கு பேச்சுப்போட்டி

கொழும்பு, புதன்

கிறிஸ்தவ இளம பெண்கள் கழகத்தினர் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பாடசாலைகளிலும் மதுவிலக்கு பேச்சுப்போட்டி ஒன்றினை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

தமிழ் பேச்சுப்போட்டியை கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினரை நடத்துமாறு கிறிஸ்தவ இளம் பெண்கள் கழகத்தின காரியதரிசி கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு தாங்கள் ஒப்புக்கொண்டதாகவும் கொழும்பு இந்து வாலிப சங்கக் காரியதரிசி தெரிவித்தார்.

## பீட்டர் சில்வா யாழ்ப்பாணம் வருவார்

யாழ்ப்பாணம், வியாழன்

இம்மாதம் 16-ந் திகதி லங்கா ஜாதிக குரு சங்கமய தலைவர் திரு. பீட்டர் சில்வாவும் காரியதரிசி திரு. எல். ஆரியவன்ஸாவும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள். இவர்கள் 16-ந் திகதி தமிழாசிரியர் சங்கக் கூட்டத்திலும் 17-ம் திகதி லங்கா ஜாதிக குரு சங்கமயத்தின் யாழ்ப்பாணக் கிளைக் கூட்டத்திலும் சொற்பொழி வாற்றுவார்கள்.

சுயபாஷை ஆசிரியர்களுக்கு ஆங்கில ஆசிரியர்களுக்கும் சம சம்பளம் வழங்குதல, ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு உள்ளது போல் பென்ஷன் உரிமைகள் வழங்குதல், தொழிற் சங்க இயக்கத்தின் 21 கோரிக்கைகள் ஆகியன பற்றி இக்கூட்டங்களில் விவாதிக்கப்படும்.

## வரியிறுப்பாளர் முயற்சி

நீர்கொழும்பு, புதன்

வரியிறுப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த 6 அங்கத்தவர்களைக் கொண்ட கமிட்டி ஒன்று நீர்கொழும்பு மாநகரசபையிலுள்ள ஊழல்கள் பற்றி விசாரணை செய்ய கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு கோருவதற்கு ஸ்தலஸ்தாபன மந்திரியைச் சந்திக்கவிருக்கின்றது.

## சிங்கள தேர்வுப் பரீட்சை

கொழும்பு, புதன்

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கும் சிங்கள தேர்வுப் பரீட்சைக்கு 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட அரசாங்க சேவை ஊழியர்கள் தோற்றவிருக்கிறார்கள் என அறியப்படுகிறது.

இதில் 7 ஆயிரத்துக்குமேற்பட்டவர்கள் இப்பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றுபவர்களாக இருப்பார்கள்.

3 வருட

# திட்டங்களை செயல்படுத்த பிரதமர் ஆவல்

கொழும்பு, புதன்

தமது அமைச்சைச் சேர்ந்த நிரந்தரக் காரியதரிசிகளிடம் மூன்று வருடத் திட்டம் எவ்வளவு தூரம் அமுல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி விபரம் அறியுமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா சகல மந்திரிகளுக்கும் அறிவித்தல் செய்துள்ளார்.

இது சம்பந்தமாக ஒவ்வொரு மாதத்திலும் வரும் இறுதித் திங்கட்கிழமைகளில் திட்டத் தலைமைக்காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட மகாநாட்டை பிரதமர் நடத்தவிருக்கிறார்.

பிரதமர் மந்திரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துளளதாவது:

பல காரணங்களினால் சில திட்டங்களை செயல்படுத்த முடியாதிருக்கும் இத்தகைய சந்தர்ப்பங்களில் இதுபற்றி விரிவாக ஆராய்ந்து பின்னர் அவற்றைத் துரிதமாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## புதிய அங்கத்தவர்களுக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு கிராமசபையின் புதிய அங்கத்தவர்களுக்கு ஊரதீவு வட்டார மக்களால் கி. மு. சங்க மண்டபத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

2-ம், 3-ம், 10-ம் வட்டாரங்களின அங்கத்தவர்களைத் தவிர்ந்த ஏனைய 9 அங்கத்தவர்களும் இந்த வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டனர்.

மடத்துவெளி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலிருந்து புதிய அங்கத்தவர்கள் மேளவாத்தியசகிதம் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

தற்போதைய கிராமசபைத் தலைவர் திரு. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக்கூட்டத்தில் திரு கு. வி. செல்லத்துரை உட்படப் பலர் அங்கத்தவர்களை வரவேற்றுப் பேசினர்.

## 'நற்சேவை வேண்டும்'

யக்கலை, புதன்

கிராமசபை அங்கத்தவர்களும், உத்தியோகஸ்தர்களும் அரசியல் வேறுபாடு காட்டாது பொதுமக்களுக்குச் சிறந்த சேவை செய்யவேண்டும் என கூட்டுறவு விவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொம்பே தொகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## முருகமூர்த்தி ஆலய உற்சவம்

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவம் இம்மாதம் 16-ந் திகதி (சனிக்கிழமை) ஆரம்பமாகவிருக்கின்றது.

24-ந் திகதி வேட்டைத் திருவிழாவும் 26-ந் திகதி தேர், தீர்த்தம் முதலியனவும் நடைபெறும்.

திருவிழா நடைபெறும் 10 நாட்களும் சமயச் சொற்பொழிவுகளும் கதாப்பிரசங்கமும் நடைபெறுவதற்கு நெல்லை அறநெறிக் கழகம் ஒழுங்கு செய்துவருகிறது.

முடிக்குரிய

## காடுகளில் திருட்டுகள் அதிகரிக்கின்றன

கொழும்பு, புதன்

முடிக்குரிய காடுகளில் மரங்கள் திருடப்படுவது இப்போது அதிகரித்துக்கொண்டு வருவதாக காட்டு இலாகா காரியதரிசி திரு. ஜே. ஆர். டி. குருசிங்கா காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவுக்கு மகஜரொன்றில் எடுத்துக்கூறியுள்ளார்.

வலுவுள்ளதும் செயல்படுத்தக்கூடியதுமான சட்டம் உருவாக்கப்பட்டாலன்றி இவ்வித திருட்டைத் தடுப்பது கஷ்டமாக இருக்குமென்றும் காரியதரிசி தெரிவித்துள்ளார்.


நாளொரு வண்ணம்
உருவாகிவரும்
நல்லைக் கந்தன்
புதியரதம்
எங்கள் மூதாதையரின் நன்கொடையால்
என எதிர்காலச் சந்ததி போற்றத்
தேர்த்திருப்பணி நிதி வழங்குவது
பக்தர்கள் நற்பணியாகும்

குறிப்பு:- பணம், காசோலை முதலியவற்றை தேவஸ்தான காரியாலயத்திற்சேர்ப்பித்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

—நல்லூர் தேவஸ்தானம்.

BLACK FLAG
பக் கில்லர்
மந்திர சக்தி போன்று
மூட்டைகளை
கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.




இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-

ஏக விநியோகஸ்தர்கள்:
ஷாயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு. BKI

# அநாவசியமான காலதாமதத்தைத் தவிர்க்குக!

## மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளுக்கு நீதியரசர் விண்ணப்பம்

கொழும்பு, செவ்.

"இந்த நாட்டின் வழக்குகளை விளங்குவதிலும் தீர்ப்பளிப்பதிலும், மாஜிஸ்டிரேட்டுகள் செய்யும் காலதாமதம், மக்களுக்கு நீதி ஸ்தலங்களிலும் நீதிபரிபாலனத்திலும் உள்ள நம்பிக்கையைத் தகர்த்துவிடும்" என்று தமக்கு முன் புனர் விசாரணைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகள் பலவற்றுக்குத் தீர்ப்பளிக்கையில் நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அபிப்பிராயப்பட்டார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

"விஷமம் செய்தது, காயம் விளைவித்தது என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் 13-3-62 ல் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் 10-7-62 ல் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டது. பல தடவை வழக்கு பின்போடப்பட்டபின் 7-4-64ல் முடிதரப்பு வழக்கறிஞர் தமது பிரதான சாட்சி ஜயசேனவைக் காணவில்லை என்று கோர்ட்டில் தெரிவித்தார்: வழக்குத் தள்ளப்பட்டது. ஜயசேன, வழக்கு இழுத்தடித்துக்கொண்டு போனதால் அலுத்துவிட்டார் என்பதே உண்மையாகும். மாஜிஸ்டிரேட் கூட பழைய வழக்கொன்றை முடித்துவிடுவதில் நிம்மதியுற்றார் என்பது வெளிப்படை. அவர் வழக்காளிகளை முதலாவது குற்றச்சாட்டில் வழக்கை நடாத்துகிறீர்களா என்று கேளாமலே வழக்கைத் தள்ளியதே இதற்குப் போதிய சான்றாகும்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 14-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 'நாடும் நாமும்' — பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர் நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' — பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 1-00 நிலையஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள் பாடுபவர் - திருவாவடுதுறை டி. எம். சபாபதிப்பிள்ளை.

12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 கிளாரினெட்.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 ஆட்சியும் மக்களும் - பேச்சு, 7-45 ராகம் தானம் பல்லவி சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவ் பாட்டு, 8-40 குரல் இசை, 9-15 வீர பாரதம் இசைச் சித்திரம், 9-30 அகிலபாரத இசைநாடகம், 10-15 இசைக்கோவை.


அடுத்த திரை விருந்து

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

நானும் ஒரு பெண்

இந்திய ஜனதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

வெற்றிகரமான 7வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) லக்ஷ்மி (கரவெட்டி)

மற்றும் 8 திரைகளில்



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி

நடித்த

பெரிய இடத்துப் பெண்


## தமிழாசிரியரின் . . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரியவில்லை. சமசம்பளக் கிளர்ச்சியை வெற்றிபெறுமற் செய்ய அவர்கள் சூழ்ச்சி செய்வதாகவே தெரிகிறது. சமீபத்தில் வெளியான ஆங்கிலப் பத்திரிகைச் செய்தியொன்று இதனை நிரூபிப்பதாக உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதிலுள்ள பொருளாதார கஷ்டத்தை எடுத்துக்காட்டிய அச்செய்தி சம்பள முரண்பாட்டுக் கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்ட அபிப்பிராயங்களையும் எடுத்துக்காட்டியிருக்கிறது. சம்பளக் கமிஷன்களுக்குச் சுயமொழி ஆசிரியர்களைப்பற்றி தவறான கருத்தைக் கொடுத்தவர்கள் வித்தியாபீடத்தின் தலைமையதிகாரிகள் என்பது யாவருமறிந்ததே. நமது நாட்டின் வித்தியாதிபதியாக இருந்து வருபவர்களும், கல்விப் பகுதியின உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களில் பலரும் 'மகாரகமப் பயிற்சிக் கல்லூரியின்' அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தவர்கள் அவர்கள் அங்கு பயிற்றப்பட்டவர்களை மற்றவர்களிலும் விசேடமாகக் காட்டுவதில் நூதனமில்லை. உண்மையில் சுயமொழி ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்களை விட எவ்வகையிலும் குறைந்தவர்களல்ல சுயமொழி மூலம் கல்விபயிற்றுவதில் சுயமொழி ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்களைவிடச் சிறந்த சேவை செய்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் திருப்தியான வாழ்க்கை நடத்த மொழிவேறுபாடற்ற சமசம்பளம் வழங்குவது அவசியமாகும்.

### தராதரப்பத்திர ஆசிரியர்கள்

இவ்வகுப்பு ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி சொல்லுந்தரமன்று. இதனை ஆசிரிய சங்கங்கள் நன்கு எடுத்துக்காட்டிவிட்டன. இந்நாட்டிலுள்ள ஆங்கில தராதரப்பத்திர ஆசிரியர் ஒரு சுயமொழி பயிற்றப்பட்ட ஆசிரியரின் சமசம்பளத்தைப் பெறுகிறார். ஆனால் தமிழ், சிங்கள தராதரப்பத்திர ஆசிரியருக்கு ஆங்கில தராதரப்பத்திர ஆசிரியரது சம்பளத்தில் பாதியே கிடைக்கிறது. தமிழ், சிங்கள தராதரப்பத்திர ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுவந்தாலும் உடனடியாகச் சம்பள மாற்றம் எதுவும் பெறுமல் பல வருடங்கள் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

### தமிழ் பாடசாலைகளும் நிர்வாகமும்

நாடு சுதந்திரமடையு முன்பு தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகம் தமிழ் மூலமே நடந்தது. தமிழாசிரியர் உத்தியோக மொழி கற்கவேண்டுமென்ற நிபந்தனையிருக்கவில்லை. இன்றோ உத்தியோகமொழிச் சுற்றுநிருபங்கள் ஆசிரியர்களைத் திண்டாடவைக்கின்றன. தலைமையாசிரியர்கள் உத்தியோகமொழி பயிலவேண்டும், இன்றேல் சம்பள உயர்ச்சியில்லை என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் நிர்வாகிகளல்ல. அவர்களை நிர்வாகிகள்போலக் கருதி அனுவசியமானதொல்லைகளைக் கொடுப்பதை அரசாங்கம் கைவிடவேண்டும். இதற்கு ஒரே வழி தமிழ்ப்பாடசாலைகளனைத்தின் நிர்வாகத்தையும் தமிழ்மொழி மூலம் செய்வது தான்.

இதுவரை தமிழாசிரியர்களின் [illegible] களை எடுத்துக்காட்டினேன். பொதுவாக இந்நாட்டு ஆசிரியர்களனைவரையும் பாதிக்கும் சில விஷயங்களையும் குறிப்பிடாவிடின் இக்கட்டுரை பூரணமாகாது. பென்ஷன், அரசியலுரிமை, மாற்றம், கல்வி நிர்வாகம் ஆகிய நாலு விடையங்களும் சகல ஆசிரியர்களுக்கும் பொதுவானவைகளாகும்.

இன்று ஆசிரியர்களனைவரும் அரசாங்க ஊழியர்களாகக் கணிக்கபபட்டு அவர்களது அரசியலுரிமை பறிக்கபபட்டுள்ளது. ஆனல் பெனஷன் விஷயத்தில் மட்டும் ஆசிரியர்களுக்குத் தனியான திட்டம் வகுக்கபபட்டிருக்கிறது இதனால் ஆசிரியர்கள் மற்ற அரசாங்க ஊழியர்களைவிட 2% மாதந்தோறும் செலுத்தவேண்டியவர்களாகவிருக்கிருர்கள். இது ஓர் அநியாயமான செயலாகும். இக்குறை விரைவில் ஒழிக்கபபடவேண்டும்.

18 வயதில் வாக்களிக்கும் உரிமைவழங்கப்பட்டுள்ள நாட்டில் ஆசிரியர்கள் அரசியலுரிமை அற்றவர்களாகவிருப்பது ஒரு விசித்திரமான செயலாகும் "அரசியலுரிமை" என்னும்போது ஆசிரியர்களனைவரும் பாராளுமன்றதில் புகுந்துவிடுவார்களோ வெனப் பல அரசியல் வாதிகள் அஞ்சுகின்றனர். அரசியலுரிமை வழங்கப்பட்டால் பாடசாலைக் கல்வி பாதிக்கப்படுமென மற்றொருசாரார் பயப்படுகின்றனர். அரசியலுரிமை என்பது தங்களது கருத்தைக் கட்டுப்பாடின்றி எழுதவும், பேசவும் எந்தப்பிரச்னையையும் ஆராயவும் உரிமையிருக்கவேண்டுமென்பதையே குறிக்கும். ஆசிரியர் சுதந்திரமுள்ளவராக இருக்கவேண்டுமென்பதையே இதுகாட்டுகிறது. 90,000 ஆசிரியர்களுககும் நமது பாராளுமன்றத்தில் இடம் எங்கேயிருக்கிறது. இதுவரை அரசியலுரிமை பெற்றிருந்த ஆசிரியர்கள் சிறந்த தலைவர்களாகவே அமைந்திருக்கிருர்களன்றி அதனை வீணான வழியில் உபயோகிக்கவில்லை என்பதையும் நாம் மனதில்கொள்ள வேண்டும். சுதந்திரமுள்ள ஆசிரியன்தான் சுதந்திர சமுதாயநதை உருவாக்கமுடியும்.

இந்நாட்டுக் கல்வி நிர்வாகமும், மாற்றமும் ஆசிரியர்களுக்குப் பெரும் தொல்லையளிக்கும் காரியங்களாகும். இதனால் ஆசிரியர்கள் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாக ஆடவேண்டியிருக்கிறது.

இந்நாட்டிலுள்ள ஆசிரியர்களின் நியமனம், பதவி உயர்வு, குற்றங்களை விசாரித்து நடவடிக்கை எடுத்தலாகியவற்றை நடத்த ஒரு கல்விச் சேவைக் கமிஷனை அமைத்தல் அவசியமாகும். மாற்றங்கள் முறைப்படி நடைபெறத் திட்டமான விதிகள் வகுக்கப்பட்டு, மாற்றங்கள் ஆசிரியர்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மாற்றச் சபைகளால் நடத்தப்படவேண்டும்.

நமக்கிழைக்கப்பட்டுவருகின்ற அநியாயங்களைப் பொறுத்துகொண்டு கண்மூடி மௌனிகளாக இருந்து பயனில்லை. ஆசிரியர்களனைவரும் ஸ்தாபனரீதியாக ஒன்றுதிரண்டு நமது குறைகளை மக்களும், அரசாங்கமும் உணரச்செய்யவேண்டும். இப்பணியைச்செய்ய எல்லா ஆசிரியர்களும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

## பிரிட்டிஷ் நிகழ்ச்சிகள்

கொழும்பு, புதன்

பிரிட்டிஷ் கவுன்சில் இம்மாதம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டுள்ளது. கொழும்பில் மாத்திரமல்லாது கண்டி, மட்டக்களப்பு, திருக்கோணமலை, சிலாபம் முதலிய இடங்களில் பொருட்காட்சிகளும், தயாரித்த நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் நடைபெறும். கொழும்பில் மேமாதம் 14ந் திகதி பேராசிரியர் ஜே. எல். சி. ரொட்டிக்கோவின் பேச்சு இடம்பெறும். மறுநாள் 'மக்பெத்' என்ற படக்காட்சியும் காண்பிக்கப்படும்.


REGAL — JAFFNA

NOW SHOWING

Daily 3Shows. Sats.&Suns. Four

Esther Williams

Howard Keel

IN

PAGAN LOVE SONG

(Technicolour)



## பரி விளம்பரம்

### வாடகைக்கு

நாவற்குழி அரசாங்க தானிய களஞ்சியத்திற்கு எதிரே கடையும் வீடும் வாடகைக்கு உண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். 408

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### FOR SALE

No. 14 Bankshall Street Area 1¾ lachcham V. C. with upstairs and godown well and frontage both Bankshall Street and 63 South Beach Road. Call with offers V. S. C. Singham, C/o Mrs. T. Cumaraswamy, Courts Road, Mallakam. 410

### விற்பனைக்கு

இரண்டரை ஏக்கர் தென்னந்தோட்டச் செய்கைக்கு உகந்த காணி தனங்கிளப்பு, நாவற்குழி—பூநகரி ரோட்டில் சாவகச்சேரியிலிருந்து இரண்டரை மைல் தூரத்தில். விபரங்கட்கு: வே. நாகலிங்கம், 4, குமாரசாமி ரோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 409


## சம்பந்தர் குருபூசை

கொழும்பு, புதன்

இம்மாதம் 28-ந் திகதி கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் செட்டியார் வீதியிலுள்ள முத்துவிநாயகர் கோவிலில் திருஞான சம்பந்தர் குருபூசை விழாவை சிறப்பாகக் கொண்டாட தீர்மானித்துள்ளார்கள். இந்த விழாவிற்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமை தாங்குவார்.

பக்திப்பாடல்களும் சொற்பொழிவுகளும் அன்று முத்து விநாயகர் கோவிலில் நடைபெறும். திரு. ஈழவேந்தன் "திருஞானசம்பந்தர் வாழ்வு" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். திரு. சிவஞானம், திரு ராஜாராம் ஆகியோரின் பக்திப்பாடல்களும் இடம்பெறும்.

## தமிழ்ச் சங்கக் கூட்டம்

கொழும்பு, புதன்

கொழும்பு தமிழ் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் 16-ம் திகதி சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் சைவ மங்கையர் கழகத்தில் நடைபெறும். தமிழ் சங்கத்தின் தலைவர் திரு. மு. வைரவப்பிள்ளை கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

# பிலிப்பின் மனமாற்றம்?

## பிற்போக்கு மந்திரிகளை அகற்றும் யோசனையை அவர் கைவிடலாம்

### மொழி, இந்திய பிரச்னையில் விட்டுக்கொடுக்கவேண்டாமென்று சுதந்திரக்கட்சி எம். பி. க்கள், மந்திரிகளிடம் வலியுறுத்து

கொழும்பு, செவ்வாய்

**மந்திரிசபையில் பிற்போக்குவாதிகளாக இருப்பவர்களை நீக்கவேண்டுமென்று பிரதம மந்திரியைக் கோரிவந்த திரு. பிலிப் குணவர்த்தன, இப்பொழுது தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். குறிப்பாக திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும், சி. பி. டி' சில்வாவையும் மந்திரிசபையிலிருந்து நீக்கவேண்டுமென்று இதுவரை காலமும் கோரிவந்த அவர் 'அந்த' எண்ணத்தை இப்பொழுது மாற்றிக்கொண்டுவிட்டதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் திரு. சி. பி. டி' சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோரின் நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. எந்தவித அரசாங்கத்திலும் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு இடமளிக்கக்கூடாதென்று அவர்கள் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.**

மந்திரிசபையிலுள்ள பிற்போக்குவாதிகளை நீக்கினால்தான் கூட்டு அரசாங்கம் அமைக்கமுன்வருவோம் என்று 'மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன முன்பு பிரதமரிடம் விடுத்த கோரிக்கையை தற்பொழுது கைவிட்டுள்ளாரென்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்று நடைபெற்ற ஐக்கிய இடதுசாரி முன்னணிக் கூட்டத்தில் திரு. பிலிப்குணவர்த்தனவோ, அல்லது அவரின் ஆதரவாளரான திரு. வில்லியம் சில்வாவோ தங்களுடைய கோரிக்கைபற்றி வலியுறுத்தவில்லை.

இதேசமயத்தில் திரு பிலிப் குணவர்த்தனவை கூட்டு அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்ற தங்களுடைய கோரிக்கையை திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் திரு. சி. பி. டி. சில்வாவும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக அறியப்படுகிறது. நாளை நடைபெறவிருக்கும் கிரிவிகார வைபவத்தில் கலந்துகொள்வதற்காக திரு. மைத்திரிபாலா சேனநாயக்காவும் திரு. சி. பி. டி. சில்வாவும் ஒன்றாக கதிர்காமம் சென்றுள்ளார்கள்.

கூட்டு அரசாங்கம் சம்பந்தமாக ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும்போது மொழிப் பிரச்னை, இலங்கை-இந்தியர் பிரச்னை ஆகியவற்றில் தற்பொழுதுள்ள நிலைமையே நீடிக்கவேண்டுமென்றும் இவை சம்பந்தமாக விட்டுக்கொடுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்கக் கூடாதென்றும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பி.க்கள் மந்திரிகளிடம் வலியுறுத்திக் கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

பொருளாதார விஷயம் சம்பந்தமாக எவ்வித உடன்பாடு ஏற்பட்டாலும் மொழிப் பிரச்னை, இலங்கை-இந்தியர் பிரச்னை ஆகியவற்றில் அரசாங்கம் தற்பொழுது கடைப்பிடித்துவரும் கொள்கையிலிருந்து எந்தவித மாறுதலுமேற்படுவதை சுதந்திரக்கட்சி தாங்கிக்கொள்ளாதெனு அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தன்னை இலங்கைப் பிரஜை என்று நிரூபிக்கத் தவறிய தோட்டத் தொழிலாளியை இந்தியரென்பதும், அவர் நாடற்றவரில்லை என்பதும்தான் இலங்கை-இந்தியர் பிரச்னை சம்பந்தமாக அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கையாகும்.

#### இந்தியர் பிரச்னை

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றிய இலங்கை-இந்திய பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படவில்லையென்று கருதப்படுகின்றது.

இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளில் எவ்வளவு தொகையினரை இந்தியா திருப்பியழைக்க விரும்புகின்றதென்பதில் இறுதியான முடிவு காணும்பொருட்டு இந்திய அரசாங்கத்துடன் இலங்கை உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பது இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கருத்தாகும்.

தாயகம் திரும்ப விரும்பும் இந்திய வம்சாவழியினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் தூண்டுதல் திட்டங்களை ஆரம்பிக்கவேண்டுமென்றும் இடதுசாரி ஐக்கிய முன்னணி கோரியுள்ளது.

## "சிங்களச் சட்டத்தில் மாற்றம் கூடாது"

### அரசாங்க எம். பி.க்கள் வற்புறுத்து

அரசியல் வட்டாரங்களில் பல விஷயங்களும் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டுவரும் இச்சமயத்தில், மொழி விஷயத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் உறுதியாகவிருக்கிறார்கள். நாடு முழுவதும் தனிச்சிங்களமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றும் சகல அரசாங்கப் பகுதிகளிலும் தனிச் சிங்கள மொழியிலேயே கருமங்கள் நடைபெறவேண்டுமென்றும் இந்த விஷயத்தில் துரிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

#### இடதுசாரி நிலை

சிங்கள மொழியில் தேர்ச்சயடையாத அரசாங்க ஊழியர்களுக்கெதிராக எந்தவித நடவடிக்கையுமோ அல்லது தண்டனையோ அரசாங்கம் விதிக்கக்கூடாதென்பது இடதுசாரிகள் —குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சியினரின் கருத்தாகும்.

## பிலிப்புக்கு மந்திரிப் பதவி இல்லை

### பிரதமர் கூறியதாக மைத்திரி அறிவிப்பு

"எங்களது நிலைமை மிகவும் தெளிவாக உள்ளது. ஒரு சிலர் இந்த நிலைமையை மாற்ற முயற்சிசெய்தபோதிலும், அது மாறவே மாறாது" என்றும் திரு. மைத்திரிபால சேனநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

கூட்டு அரசாங்கத்தில் திரு. பிலிப் குணவர்த்தனவைச் சேர்த்துக்கொள்வதுபற்றி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா அபிப்பிராயம் தெரிவிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:-

"நிபந்தனைகளுடனே, அல்லது நிபந்தனைகளின்றியோ திரு. பிலிப்குணவர்த்தன கூட்டு அரசாங்கத்தில் சேருவதை நாங்கள் எதிர்க்கிறோம். நிலைமையை நாங்கள் ஏற்கனவே விளக்கித் தெரிவித்துள்ளோம். இப்பொழுதோ அல்லது பின்னரோ திரு. பிலிப் குணவர்த்தன அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார் என்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா எங்களுக்கு உறுதியளித்துள்ளார். பிரதமர் அளித்த உறுதிப்படியே அவர் கடைசிவரை செயலாற்றுவார். என திடமாக நம்புகிறோம்."

இரு மந்திரிகளான திரு. மைத்திரிபாலா சேனநாயக்காவும், திரு சி. பி. டி. சில்வாவும் இன்று கதிர்காமத்தில் பிரதம மந்திரியுடன் கலந்துகொண்டார்கள். திரு. கலுகல்லை, திரு. ரி. பி. இலங்கரத்ன, திரு. பதியுதீன் முகமத், திரு. சிறீவர்த்தன ஆகிய மந்திரிகளும் கதிர்காமத்தில் தங்கியுள்ளார்கள்.

## சிரமதானம் மூலம் கட்டப்படும் நூல்நிலையம்

வட்டுக்கோட்டை, செவ்.

வட்டுக்கோட்டை காந்திஜி கிராம முன்னேற்றச்சங்க சனசமூகநிலையத்தினர் அமைத்துவரும் நூல்நிலையத்தின் கட்டிட வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்றுவருவதாக கட்டிட வேலைகள் இயக்குனர் குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இந் நூல்நிலையத்தின் திறப்புவிழா கூடிய விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்,

சுமார் இருபதினாயிரம் ரூபா செலவில் கட்டப்படும் இந்த நூல் நிலையம் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுவருவதாகவும், நூல்நிலையத்துக்கு முன்னால் பரந்த வெளி இருப்பதால் இது எல்லாவகையிலும் பொதுமக்களுக்கு உபயோகமாகுமெனவும் அவர் தெரிவித்தார். கட்டட வேலைகள் அனேகமாகப் பூர்த்தியாகிவிட்டதாகவும், இனிமேல் கூரை வேலைகள் கவனிக்கப்படவிருப்பதாகவும்தெரிவித்த அந்தப் பிரமுகர் கட்டிட வேலையின் பெரும் பகுதியை இளைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் சிரமதானம் மூலமே கட்டி முடித்ததாகவும் இதனால் பெருமளவு பணம்மிச்சப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கருணாநிதி, நடராஜன் பிணையில் விடுதலை

சென்னை, மே 12

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. மு. கருணாநிதி, திரு. என். வி. நடராஜன் மற்றும் ஏழுபேரும் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். சட்ட எரிப்பு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட இவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், மதுரை மாவட்ட நீதிபதி அண்மையில் தலா ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்திருந்தது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

திரு. மு. கருணாநிதி, திரு என். வி நடராஜன் மற்றும் ஏழுபேரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல்மனு தாக்கல் செய்துள்ளனர். இவர்களின் அப்பீல் சம்பந்தமான தீர்ப்பு வெளியாகும்வரை அவர்களை ஜாமீனில் விடுதலை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே இவர்கள் இப்பொழுது பிணையில் விடுதலை செய்ப்ப்பட்டுள்ளனர்.

வடமாகாண தமிழ்

## ஆசிரியர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்:

### ஆங்கில ஆசிரியரும் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர்களின் உரிமைபற்றிய கோரிக்கைகளை வலிவுறுத்தும்வகையில் வடமாகாண ஆங்கில ஆசிரியர் சங்கமும் வட இலங்கைத் தமிழாசிரிய சங்கத்துடன் இணைந்து எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறும் பகிரங்கக் கூட்டத்திலும் பங்குபற்றுவதென்றும் வடமாகாண ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி நேற்றிரவு ஏகமனதாகத் தீர்மானித்தது.

இன்று தொடக்கமாகக் கிளைச் சங்கங்களுக்குப் போய் அங்கத்தவர்களை உற்சாகமூட்டி இவ் வார்ப்பாட்டத்திலும் பகிரங்கக் கூட்டத்திலும் பெரும்பாலானோர் பங்குபெறச் செய்யவேண்டுமென்றும் இக் கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு திரு. எம். பேராயிரவர் தலைமை வகித்தார்.

## 'சட்டப்படி தீர்வு நிரந்தரமாகாது'

சென்னை, மே. 12

காஷ்மீர் பிரச்னைக்கு சட்டப்படி தீர்வு காணப்பட்டால் அது நிரந்தரமாக இருக்காது என்று ஷேக் அப்துல்லாவுடன் சுமார் ஒரு மணி நேரம் பேசிய பின் திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு. நாஞ்சில் மனோகரன் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்.

திராவிடமுன்னேற்றக்கழகத் தலைவர்களான திரு. நாஞ்சில் மனோகரன், திரு. ராஜாராம் ஆகியோர்கள் ஷேக் அப்துல்லாவைச் சந்தித்துப் பேசினர்.

## இடமாற்றச் சபையில் இடம் தருக!

### குருசங்கமய கோரிக்கை

கொழும்பு, புதன்

"இடமாற்றங்கள் குறித்து ஆசிரியர்களிடையே நிலவும் அதிருப்தியை நீக்க வேண்டுமானால் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் பிராந்திய இடமாற்றுச் சபையில் இடம்பெறவேண்டும்" என்று இலங்கா குரு சங்கமய கல்வி மந்திரி பி. பி. ஜி. கலுகல்லைக்கு அனுப்பிவைத்த மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளது.

"கல்வி பயிற்றும் ஆசிரியர்களே மாணவருக்கு எததகைய நூல்களை போதிக்கவேண்டும் என்று தெரிவு செய்ய வல்லவர்களாதலால் ஆசிரியர்கள து பிரதிநிதிகள் கல்வி இலாகாவிலுள்ள கல்விப் பிரசுரச்சபையிலும், கல்வி ஆலோசனைச் சபையிலும் கூட இடம்பெறுதல் அவசியமாகும்" எனவும் அந்த மசஜரில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## அரியாலை கோஷ்டியின் வெற்றி

வவனியா, செவ்வாய்

20 பேர்கள் கொண்ட அரியாலை 'பி' விளையாட்டு வீரர்கள் அண்மையில் வவனியாவுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்து அங்கு உதைபந்தாட்டம், மென்பந்து, கிரிக்கெட், கைப்பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்களில் பங்குபற்றி இரண்டில் வெற்றியும் ஒன்றில் தோல்வியும் அடைந்தார்கள்.

முதலில் கைப்பந்தாட்டம் வவனியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கும், அரியாலை 'பி' கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. இதில் வவனியா கோஷ்டி வெற்றிபெற்றது. இக் கோஷ்டிக்குத் திரு. ஐயம்பிள்ளை தலைமை தாங்கினார்.

இரண்டாவதாக நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அரியாலை 'பி' கோஷ்டி 4 விக்கெட்டுக்களாலும் 2 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. இதில் வவனியா கோஷ்டிக்குத் திரு. கே. ஞானசுப்பிரமணியமும், அரியாலைக் கோஷ்டிக்கு திரு. எஸ். கே. மகாலிங்கமும் தலைமைதாங்கினார்கள்.

மூன்றாவதாக நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி வவனியா முற்றவெளியில் திரளான மக்கள் முன்னிலையில் வவனியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கோஷ்டிக்கும் அரியாலை 'பி' கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. அரியாலை கோஷ்டிக்குத் திரு. எஸ். கே. மகாலிங்கமும், வவனியா கோஷ்டிக்குத் திரு. நித்தியசுந்தர சொருபராசாவும் தலைமை தாங்கினர்கள். அரியாலை கோஷ்டி மிகவும் அழகாகவும் நேர்த்தியான முறையிலும் பங்குபற்றி இலகுவில் மூன்று கோல்களை வவனியா கோஷ்டிக்குள் செலுத்தி வெற்றிபெற்றார்கள். வவனியா கோஷ்டியில் திரு. பாலசுந்தரமும், அழகையாவும், பசுபதியும் திறமையாக விளையாடினார்கள் இப்போட்டிக்குத் திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

## ஆள் தேவை

மோட்டார் வாகனங்கள் "பெர்குஷன்" உழவு யந்திரங்கள் திருத்தல், மின்சார (Wiring)வேலை, மின்சார உபகரணங்கள் திருத்தல் ஆகியனவற்றிற்கு நன்கு அனுபவம் வாய்ந்த மெக்கானிக், எலக்றிஷன் ஆகியோர் உடன் தேவை. 20-5-64க்கு முன் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

"மொடேர்ன் கறாஜ்",
நவீன கம - கைத்தொழில் கூட்டுத்தாபனம்,
யந்திரசாலை வீதி,
363 வவனியா,

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 14-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.